<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>

**அசல் வழக்கு எண்.** 135/2016

**வாக்குமூலம்.பி.வா.சா.2**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமனராவ் | தொழில் | |
| த/பெ. | ஜெனார்தனராவ் | வயது | 55 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 10.10.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(சாட்சிக்கு தமிழ் தெரியாததால் கேள்விகள் ஆங்கிலத்தில் கேட்கப்பட்டு தமிழில் பதிவு செய்யப்படுவதால் கேள்வி பதில் முறையில் சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது)

கேள்வி : எனக்கு வழக்கு விபரங்கள் பற்றி நன்கு தெரியுமா?

பதில் : எனக்கு சில விபரங்கள் தெரியும்.

கேள்வி : வாதி வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் பற்றி தெரியுமா?

பதில் : வாதி கிரைய ஆவணத்தை ரத்து செய்ய பரிகாரம் கோரி இருப்பதாக கேள்விப்பட்டேன்.

கேள்வி : நிரூபணவாக்குமூலத்தில் தெலுங்கான மற்றும் ஆந்திர பிரதேஷ் மற்றும் தமிழ்நாட்டில் நான் நெல் விதை தொழில் செய்து வருவதாக குறிப்பிட்டு இருப்பதற்கு என்ன ஆவணம் தற்போது தாக்கல் செய்து உள்ளிர்கள்?

பதில் : தற்போது ஆவணம் தாக்கல் செய்யவில்லை கேட்டால் தாக்கல் செய்வேன்.

கேள்வி : தமிழ்நாட்டில் உங்களுடைய கடைகள் எங்கு அமைந்து இருக்கிறது.

பதில் : தமிழ்நாட்டில் எனக்கு கடைகள் இருப்பதாக நான் நிரூபணவாக்குமூலத்தில் சொல்லவில்லை. எனக்கு தமிழ்நாட்டில் கடைகள் இல்லை. நான் விதை நெல்லை கடைகளுக்கு விற்பனை செய்பவர் மட்டும் தான்.

கேள்வி : தமிழ்நாட்டில் விதை நெல் விற்பனை செய்ய உரிமம் உள்ளதா?

பதில் : தெலுங்கான மற்றும் ஆந்திர பிரதேஷத்தில் உரிமம் உள்ளது. தமிழ்நாட்டில் இல்லை. விதை நெல் சட்டம் 1966 படி தமிழ்நாட்டில் விதை நெல் விற்பனை செய்ய உரிமம் அவசியம் இல்லை.

கேள்வி: 2ம் பிரதிவாதி குருசால ஜெயராமையா எனக்கு உறவினரா?

பதில்: இல்லை

கேள்வி : 2ம் பிரதிவாதியுடன் எனக்கு எத்தனை ஆண்டுகள் பழக்கம்?

பதில் : 2003ஆம் ஆண்டில் இருந்து பழக்கம்.

கேள்வி : பி.வா.சா.ஆ–2 ஆவணமானது எந்த மொழியில் எழுதப்பட்டுள்ளது?

பதில்: கிரைய ஆவணம் தமிழில் எழுதப்பட்டுள்ளது. ஆவண எழுத்தர் எனக்கு ஆங்கிலத்தில் விளக்கினார்.

கேள்வி : நான் மேற்படி கிரைய ஆவணத்தில் ஒரு சாட்சி மட்டும் தான் என்றால் என்ன சொல்கிறிர்கள்?

பதில் : நான் ஒரு சாட்சி அசோக் என்பவர் ஒரு சாட்சி.

கேள்வி : கிரைய ஆவணம் பதிவு செய்வதற்கு முன்பு வாதி ராஜாமணியை நானும் எனது நண்பரான 2ம் பிரதிவாதி ராஜாமணியும் சந்திதோமா?

பதில் : நான் மற்றும் 2ம் பிரதிவாதி மற்றும் 1ம் பிரதிவாதி அசோக் ஆகிய மூவரும் வாதியை சந்தித்தோம்.

கேள்வி : நான் 2ம் பிரதிவாதி குருசால ராமையாவிற்கு உறவினர் என்பதால் எனது நிரூபணவாக்குமூலம் வழக்கிற்கு தொடர்பில்லாதது என்று சொன்னால் என்ன சொல்கிறிர்கள் ?

பதில் : நான் உறவினர் இல்லை நண்பர் மட்டும் தான்.

**மறுவிசாரணையில்லை.**